ானதல்,
றிமுகப்
றுவனத்
ருக்கும்.

லகளின்
ம் நாம்
பதையும்,
ணித்துறை
கோட்பாடு
வீனங்கள்
ல்வாக்குச்
ராய்ந்துள்
வடிவமை
ணிகளான
கருத்தில்
செயற்பாடு
ாய்ந்ததாக
தித்திறனும்

ifth Edition,
Delhi, 1997.

r, Phillip L,
al Behavior,
lishers, 2001.





# வணிகவங்கிகளும் அவற்றின் தொழிற்பாடும்

**A.N. Ahamad**
Senior Lecturer

**A.A. Mohamed Nafile,**
Lecturer in Economics,
South Estern University of Sri Lanka.

## அறிமுகம்

### வங்கிகள் என்றால் என்ன?

வங்கிகள் பொதுமக்களிடமிருந்து பணத்தை வைப்பாக ஏற்றுக்கொள்வதும் அவர்கள் விரும்பும் போது அவ்வாறான வைப்புக்களினை காசோலைகள் மூலமாகவும் கடன் பத்திரங்கள் மூலமாகவும் மீளவும் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு நிறுவனமாகும். அவ்வாறு கூறுமிடத்து வங்கிகள் அத்தியாவசியமான இரண்டு நிதிசார் தொழிற்பாடுகளினை செய்யவேண்டும். *அவை;*

(1) பொதுமக்களிடமிருந்து காசோலைகளினையும் பணத்தினையும் வைப்பாக ஏற்றுக்கொள்ளல்.

(2) கடன் வசதிகளினை வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல்.

ஆக வங்கி என்பதனை நாம் இலகுவாக விளங்கிக் கொள்வதாக இருப்பின்; பணத்தையும் கடனையும் கையாளும் ஒரு நிறுவனத்தை வங்கி எனலாம். மேலும் தேவைப்படுமிடத்து பணத்தை இடத்துக்கிடம் இடமாற்றியும் வங்கிகள் சேவையாற்ற முடியும். எவ்வாறு இருந்தாலும் நவீன வங்கிகள் இன்று பலதரப்பட்ட தொழில்பாடுகளினை ஆற்றி வருவதனால் வங்கி குறித்த பொதுவான வரைவிலக்கணத்தைத் தருவது கடினமாகும்.

## வரைவிலக்கணம்: –

வங்கிகள் மற்றும் அவற்றின் தொழில்பாடுகளினை வரைவிலக்கணப்படுத்திக் கூறிய அறிஞர்களாகப் பின்வருவோர் குறிப்பிடத்தக்கவர்களாக இருக்கின்றனர்.

**(i) Crowther** **(ii) Kinley**
**(iii) Sayers** **(iv) John Paget**

**(i) Crowther:-**

அவர்களின் கருத்துப்படி "வங்கி என்பது; தன்னுடையதோ அல்லது பிறருடையதோதான பணத்தினையும், கடன்களினையும் கையாளும் நிறுவனத்தைக் குறிக்கும் என்கின்றார்." இன்னும் தெளிவாகக் கூறுவதாயின் - யார் தனது வருமானத்தில் சேமிக்கக் கூடியதான அல்லது செலவுபோக மீதமாக பணத்தை வைத்திருக்கின்றனரோ அவர்களிடமிருந்து அவ்வாறாகவுள்ள பணத்தினை சேகரித்து, பணத்தினைக் கடனாக பெறவிரும்புவர்களுக்கு அவ்வாறான பணத்தினை வழங்கக் கூடிய நிறுவனம் "வங்கி" என்கின்றார்.

**(ii) Kinley:-**

என்பவருடைய வரைவிலக்கணமானது பின்வருமாறு அமைந்திருக்கின்றது.

"வங்கி என்பது; எந்தத் தனியார் தம்மிடமுள்ள பயன்படுத்தாத பணத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும், பெருக்கிக் கொள்வதற்காகவும் விரும்புகின்றாரோ அவரால் நம்பிக்கையின் பேரில் ஒப்படைக்கப்பட்ட பணத்தைக் கொண்டு செயற்படுகின்ற அமைப்பு" எனக்கூறுகின்றார்.

**(iii) John Paget:-**

(1) வைப்புக் கணக்கு
(2) நடைமுறைக் கணக்கு
(3) காசோலைகளினை விநியோகித்தலும், பணம் செலுத்துதலும்
(4) வாடிக்கையாளர்களினால் குறுக்குக் கோடிட்ட / கோடிடாத காசோலைகளினைச் சேகரித்தல்.

ஆகிய பணிகளினை மேற்கொள்ளாத எதுவும் 'வங்கி' என்று அழைக்கப்பட முடியாதவை" என்கிறார்.

பேராசிரியர் **Sayers:-**

"ஒரு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட கடனாக்கம் (Bank Deposits) பல்வேறு நபர்களினால் பரஸ்பரம் ஒருவர்க்கு ஒருவர் ஏற்றுக்கொள்ளப் படுமாயின் அது 'வங்கி' எனப்படும்."

## வங்கிகளின் தோற்றம் குறித்த மதிப்பீடு: -

வங்கிகளின் தோற்றத்தினையும் வரலாற்றையும் எடுத்து நோக்கின் "வங்கி" என்ற பதம் மிகவும் எளிமையாக எல்லோராலும் இலகுவாகப் புரிந்துகொள்ளக்கூடிய ஓர் அமைப்பில் இருந்து வருகின்றது. கி.மு. 2000ம் ஆண்டின் ஆரம்பத்தில் பாபிலோனியன்ஸ் (Babylonians) தான் வங்கி முறைமை ஒன்றைத் தோற்றுவித்திருந்தனர். இதேபோல் ஆதிகால கிரேக்கர்களும், ரோமானியர்களும் நடைமுறையில்; இலாபத்துக்கும் மறு நன்மைகளின் பேரிலும் கடன்களினை வழங்கி வந்திருக்கின்றனர். எவ்வாறாயினும்; கட்டுக்கோப்பாகவும் முறைப்படுத்தப்பட்ட ஒழுங்கிலும் 12ம் நூற்றாண்டில் 'வெனிஸ்' (Venice), 'ஜினோ' (Genoa) ஆகிய இடங்களில் தான் வங்கிகள் நிறுவப்பட்டிருந்தன. இவை உண்மையில் இத்தாலிய பாரம்பரிய நகரங்களாகும். இதன் மூலம் வங்கி (Bank) என்ற பதம்கூட இத்தாலியிலிருந்து உருவாகியிருக்கக் கூடும். எனினும் Bank என்ற சொல் ஜேர்மனிய சொல்லான "Banck" என்பதிலிருந்து தோன்றியது எனவும் - இதன் கருத்து 'குவி' (Mound), 'ஒன்று சேர்த்தல்' (Heap) எனவும் கூறப்படுவதுடன் இவை இத்தாலிய சொல்லான "Banco" என்பதுடன் இணைத்துக் கூறப்பட்டதாகவும் இருக்கலாம். வேறுசிலர் Bank என்பது; Bancus அல்லது Banc அல்லது Banque என்பதிலிருந்தும் உருவாகியிருக்க முடியும் எனவும் கருதுகின்றனர். மேலும், நஷ்ட ஈட்டிலான கடன்களும் மாற்றல் ஒழுங்குகளும் Assyria, Phoenicia, Egypt ஆகிய இடங்களில்; பூரணமாக வளர்ச்சி காணப்பட்ட Greece, Rome போன்ற இடங்களுக்கு முன்னரே இருந்துள்ளன.

ஆரம்பகால ரோமானிய வங்கியாளர்கள் Argentarii, Mensarii அல்லது Callybistoe என அழைக்கப்பட்டனர். அதேபோல் வங்கியானது அங்கு Tabernoe Argentarioe என அழைக்கப்பட்டது. அக்காலத்தில் காணப்பட்ட இத்தகைய வங்கிகள் சில; தமது சொந்தக் கணக்கின் பேரிலான வர்த்தக முயற்சிகளையும், ஏனைய சில - அரசாங்கத்தினால் வரிகளினை வசூலிக்கும் நிறுவனங்களாகவும் நியமிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான ஆரம்பகால வங்கிகள் பெரும்பாலும் தனியாள் ஒருவராலேயே உருவாக்கப்பட்டிருந்தன. பிற்காலங்களில் நாடுகளின் அரசாங்கங்கள் பொது வங்கிகளினை (Bublic Bank) ஒன்றில்; வர்த்தகத்துக்குரிய வசதி வாய்ப்புக்களினை வழங்குவதற்காகவோ அல்லது; அரசாங்கத்துக்குச் சேவை செய்வதற்காகவோ நிறுவின.

மிகவும் பண்டைக்கால வங்கியாக 1157ல் நிறுவப்பட்ட 'The Bank of Venice' என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. இதுவே முதல் பொது வங்கியாகவும் அமைந்திருந்தது. ஆனால்; உண்மையில் இது நவீன கருத்தில் ஒரு வங்கியாக இயங்கவில்லையாயினும் பொதுக் கடன்களினை பரிமாற்றும் அலுவலகமாகவே தொழில்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து; The Bankd of Barcelona - 1401, The Bank of Genoa - 1407, என்பன நிறுவப்பட்டன. இவற்றில் வெனிஸ் வங்கியும், ஜினோ வங்கியும் 18ம் நூற்றாண்டின் இறுதிவரையும் இயங்கிவந்திருந்தன. வங்கித்துறை வரலாற்றை மேலும் ஆய்வு செய்தால்; 1336ல் Florence எனுமிடத்தில் "Monte" என்பது உருவாக்கப்பட்டது. இத்தாலிய சொல்லான இது A Standing Bank அல்லது Mount of Money என்ற கருத்துக்களினைத் தருகின்றது. Banbrigge என்ற ஆங்கிலேய எழுத்தாளர் - "Three Bankers of Venice" என்பதனை மூன்று பொதுக்கடன்கள் - Three Public Loans or Mounti எனக்குறிப்பிட்டிருந்தார்.

1349ன் ஆரம்பத்தில் Business of Banking ஆனது Barcelona நகரத்தில் வாழ்ந்த ஜவுளி (drapers)வியாபாரிகளினால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அவர்களின் தொழிலை முறைப்படி செய்து கொள்ளும் நோக்கில் அவ்வங்கி உருவாக்கப்பட்டிருந்தது. இங்கு வாழ்ந்த ஜவுளி வியாபாரிகள் தமக்குத் தேவையான பாதுகாப்புக்களினை தராதவிடத்து ஏனைய நபர்களினை இவ்வியாபாரத்தினை மேற்கொள்ள அனுமதித்திருக்க வில்லை.

இதன் பின்னரே பொதுவங்கியாக 1401ல் நிறுவப்பட்ட பார்ச்சலோனா வங்கி அமைந்திருந்தது. இவ்வங்கியானது; நாணயமாற்றுக்கள், வைப்புக்களினைப் பெறுதல், உண்டியல்களினைக் கழிவுக்கு மாற்றிக்

கொடுத்தல் ஆகிய பணிகளினை உள்நாட்டு மக்களுக்காகவும், வெளிநாட்டு வர்த்தகர்களுக்காகவும் மேற்கொண்டு வந்தது. அதேபோல் 1407ல் The Bank of Genoa வும், 1609ல் The Bank of Amsterdam வும், 1690இல் The Bank of Hamburg ஆகியன அவ்வவ் நகரங்களின் வர்த்தக / வணிக தேவைப்பாடுகளினை நிறைவேற்றும் பொருட்டு உருவாக்கப்பட்டன. இவ்வங்கிகள் எல்லாவிதமான வைப்புக்களினை ஏற்றுக்கொண்டதுடன் இத்தகைய வைப்புக்களின் கேள்விக்கு ஏற்ப மீளப்பெற்றுக் கொள்ளவோ அல்லது இன்னும் ஒருவருக்கு மாற்றிக் கொள்ளவோ வாடிக்கையாளர்களுக்கு அனுமதி அளித்தன. வைப்பாளர்கள் 06 மாதகாலத்திற்குள் மீளப் பெறக் கூடியதான பத்திரங்கள் இவ்வங்கிகளால் விநியோகம் செய்யப்பட்டன. இதுவே பிற்காலத்தில் நவீன காசோலையாகப் பரிணமித்துள்ளது எனலாம். மேலும் இன்றுள்ள இங்கிலாந்து வங்கிகளின் மாதிரிகள் அன்றைய Amsterdan வங்கியிலிருந்து தான் பெறப்பட்டிருந்ததாக வரலாற்றுப் பொருளியலாளர்கள் கருதுகின்றனர்.

## வணிகவங்கிகளின் தொழில்பாடுகள்: -

Crowther அவர்களின் கருத்துப்படி நவீன வங்கிகளின் மூன்று முன்னோடிகள் இருந்துள்ளன. *அவை;*

**(i) The Merchant (ii) The Goldsmith**

**(iii) The Money - Lendar**

***இதில் முதலாவது;***

வர்த்தக செயற்பாடுகளுக்காகத் தேவைப்படும் பணக்கொடுக்கல் வாங்கல்கள் ஓரிடத்திலிருந்து இன்னும் ஓர் இடத்துக்கு எடுத்துச் செல்லப்படுவதனைக் குறிக்கின்றது. இது உண்மையில் வங்கிகளின் மிக முக்கியமான தொழில்பாடுகளில் ஒன்றாக இருக்கின்றது.

***இரண்டாவது;***

இங்கிலாந்துடனான நவீன வங்கிகளின் தொழில்பாட்டுடன் தொடர்புபட்டதாகும். வர்த்தக முயற்சிகளின் போதும், பணத்துக்குப் பதிலீடாக / மாற்றீடாகக் கொள்ளப்படத்தக்க தங்கம், வெள்ளி என்பன Goldsmiths இல் பாதுகாப்பாகச் சேமிக்கப்பட்டிருந்ததுடன் போக்குவரத்தில் ஏற்படும் பல்வேறு சிரமங்களினைத் தவிர்த்துக் கொள்ளவும். இம்முறை பயன்பட்டிருந்தது.

***மூன்றாவது;***

வங்கித் தொழில்களின் முன்னேறிய அடுத்த கட்டமாக இது கொள்ளப்படுகின்றது. அதாவது தம்மிடம் வைப்பாக இருக்கும் பணம், தங்கம், வெள்ளி என்பனவற்றின் பெறுமதிக்கு ஏற்ப குறிப்பிட்ட தொகைப்பணம் கடனாக்கம் செய்யப்பட்டது. இதனை முதன்முதலில் மேற்கொண்டது Goldsmiths ஆகும். ஆரம்பத்தில் இவ்வாறான கடனாக்கம் 100% ஆக இருந்தாலும் பின்னர் மக்கள் தமது வைப்புக்களினைத் திரும்ப எடுக்கும் வீதத்துக்கும், நாளாந்த வைப்பு வீதத்துக்கும் ஏற்ப மாற்றப்பட்டிருந்தது.

மேலுள்ள பொதுவான பின்னணியினைக் கொண்டு இன்றைய நவீன வர்த்தக வங்கிகளின் தொழில்பாடுகளினை நோக்க முடியும். ஏனெனில் இப்போதுள்ள நவீன உலகில் வங்கிகள் பல்வேறு பணிகளினை ஆற்றுகின்றன. நாம் வணிக வங்கிகளின் தொழில்பாடுகளினைப் பின்வரும் மூன்று பிரதான வகைக்குள் உள்ளடக்க முடியும்.

(1) முதலாம்தர தொழில்பாடுகள் / அடிப்படைத் தொழில்பாடுகள்.

(2) இரண்டாம்தர தொழில்பாடுகள் / பயன்பாட்டுத் தொழில்பாடுகள்.

(3) மூன்றாம்தர தொழில்பாடுகள் / நவீன தொழில்பாடுகள்.

*இது மேலும் இருவகைப்படும்.*

(அ) முகவராகப் பணியாற்றுதல்.

(ஆ) தொழில்நுட்ப சேவைகள்.

## அடிப்படைத் தொழில்பாடுகள்: -

இவ்வாறான தொழில்கள் / சேவைகளினை வணிகவங்கிகள் மரபுவழியில் காலம்காலமாக மேற்கொண்டு வருகின்றன. அவையாவன;

### (1) வைப்புக்களினை ஏற்றுக்கொள்ளல்:

இதுவே வங்கிகளின் மிகவும் முக்கியமான அடிப்படைத் தொழில்பாடாகும். பணத்தைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதும் அதன் மூலம் இலாபத்தினை எதிர்பார்க்க முடியாத போதும் வேண்டியபோது திரும்ப எடுத்துக்கொள்ளக்கூடிய வசதிகளினை வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கி

வருகின்றன. இதன் மூலம் வாடிக்கையாளர்கள் வட்டியைப் பெறுவதுடன், திருட்டு, களவு போன்ற அபாயங்களிலிருந்தும் தவிர்ந்துக்கொள்ள முடிகின்றது.

எனவே வங்கிகள் வித்தியாசமான வைப்புக் களினைத் தமது வாடிக்கையாளர்களுக்காகப் பேணி வருகின்றன.

*அவையாவன;*

***(i) நிலையான வைப்புக்கணக்கு:-***

இத்தகைய கணக்கின் கீழ் 06 மாதம், 01 வருடம் முதல் 05 வருடங்கள் நிலையான வட்டி வீதத்தில் பணத்தை வைப்பிலிட முடியும். முதிர்வுக் காலம் முடிவில்/மாதாந்தம் வட்டியும் முதிர்வுக் காலத்தின் பின்னர் அசலும் வட்டியும் கிடைக்கும். இவ்வாறான கணக்குகள் தவணை வைப்புக்கள் (Time Deposit) எனவும் அழைக்கப்படுகின்றன.

***(ii) நடைமுறை வைப்புக்கணக்கு:-***

இவ்வாறான கணக்குகளினைப் பொதுவாக வியாபாரிகள், வர்த்தகர்கள் தமது நாளாந்த வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களின் போது பணத்தைப் பரிமாற்றிக் கொள்ளப் பயன்படுத்துகின்றனர். இக் கணக்கின் மூலம் எவ்வித வட்டிகளும் / இலாபங் களும் வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்காததுடன் வங்கி சேவைக் கட்டணத்தையும் அறவிடும். இத் தகைய வைப்புக்களினைக் கேள்வி வைப்புக்கள் (Demand Deposit) எனவும் அழைப்பர்.

***(iii) சேமிப்பு வைப்புக்கணக்கு:-***

பொதுமக்களிடமிருந்து சிறுகச் சிறுக நாளாந்தம் பணத்தைச் சேமித்து; திரட்டிய நிதியாக முதலீடு களின் பேரில் வங்கிகள் கடனாக்கம் செய்து வருகின்றன. எனவே இவ்வைப்புக்களின் பேரில் வட்டி வழங்குவதுடன் பணத்தைத் திரும்பப் பெறும் விடயத்தில் கட்டுப்பாடுகளினையும் வங்கிகள் விதிக்கின்றன.

***(iv) Recurring வைப்புக்கணக்கு:-***

இதன்கீழ் நிலையான வருமானத்தை மாதாந்தம் பெற்றுவரும் வாடிக்கையாளரிடமிருந்து குறிப்பிட்ட தொகையைக் கிரமமாகச் சேமிக்கும் பேரில் வங்கி பணத்தைச் சேமிப்பாகப் பெறுகின்றது. இதன்மூலம் நீண்ட காலத்தில் வாடிக்கையாளர் வட்டியுடன் முதலையும் திரட்டிய பணமாக மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.

**(2) முற்பணக்கடன்களை வழங்கல்:**

வங்கியில் இரண்டாவது முக்கிய தொழிற்பாடாக இது அமைந்துள்ளது. இதன் மூலம் பொதுமக்களுக்கு முற்பணக் கடன்களினை வழங்கி இலாபம் உழைத்துக் கொள்கின்றது. இத்தொழிற்பாடு பல பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவையாவன:

**(i) *அழைப்புப்பணம் (MONEY AT CALL)***

இதன்கீழ் வங்கி மிகவும் குறுகிய கால அறிவித்தலின் பேரில் (01 நாள் முதல் 14 நாட்கள் வரை) தான் வழங்கிய கடன்களை வட்டியுடன் சேர்த்து மீளப்பெற்றுக்கொள்ளும். இம்முறை பெரும்பாலும் மற்றய வங்கிகளுக்கு, நிதிநிறுவனங் களுக்கும்தான் வழங்கப்படுகின்றது.

**(ii) *காசுக்கடன்:-***

வாடிக்கையாளர் தமது நடைமுறைச் சொத்துக் களின் பேரில் (பங்குகள், இருப்புக்கள், உண்டியல் கள்) கடன்களினை இதன் கீழ்ப் பெற்றுக் கொள்ள முடியும். வங்கி இவ்வாறான வாடிக்கையாளர்களின் கணக்கில் இச்சொத்துக்களின் நடைமுறைப் பெறு மானத்திற்கு ஏற்பகடன்களினை வழங்கும்.

**(iii) *மேலதிகப் பற்று:-***

சில வேளைகளில் தமது நம்பிக்கையான வாடிக்கையாளர்களின் அவசர தேவைக்காக வைப்புத்தொகையிலும் பார்க்க அதிகளவு தொகை யை வங்கி வழங்கும். இச்சேவைக்கான கணிசமான வட்டியையும் குறிப்பிட்ட காலத்திற்குள் வங்கி பெற்றுக்கொள்ளும்.

மாதாந்தம்
குறிப்பிட்ட
ரில் வங்கி
இதன்மூலம்
வட்டியுடன்
றுக்கொள்ள

ழங்கல்:

தாழிற்பாடாக
துமக்களுக்கு
தி இலாபம்
ழிற்பாடு பல
யாவன:

AT CALL)

ங்குகிய கால
ல் 14 நாட்கள்
ள வட்டியுடன்
ம். இம்முறை
, நிதிநிறுவனங்
ர்.

றைச் சொத்துக்
கள், உண்டியல்
பெற்றுக் கொள்ள
க்கையாளர்களின்
டைமுறைப் பெறு
வழங்கும்.

நம்பிக்கையான
ர தேவைக்காக
அதிகளவு தொகை
க்கான கணிசமான
லத்திற்குள் வங்கி





(iv) ***மாற்றுண்டியல்களினை கழிவிடு செய்தல்:-***

இன்றுள்ள நவின வர்த்தக வங்கிகளின் பிரபல்யமான தொழிற்பாடாக இதனைக் கொள்ள முடியும். மாற்றுண்டியல்களின் முதிர்வுக்காலத்திற்கு முன்னர் பணமாக மாற்றிக் கொள்ள விரும்பும் ஒருவருக்கு அதனை பிறப்பித்த நிறுவனத்துடன் உடன்பாட்டுக்கு வருவதன் மூலம் முதிர்வுக் காலத்திற்கு முன்னரே வங்கிகள் அவற்றை கழீவீட்டின் பேரில் பணமாக வழங்குகின்றனர்.

(v) ***காலக்கடன்கள்:-***

நடுத்தரக்கால, நீண்டகால கடன்களினை வங்கிகள் கடன் தேவைப்படுவோருக்கு வழங்கிவருகின்றன. இத்தகைய கடன்களின் முதிர்வுகாலம் குறைந்தது ஒரு வருடமாகும். இவ்வாறான கடன்களுக்கு வங்கிகள் வட்டியைப் பெறுவதும் முதிர்வுக் காலத்தில் அவை அசலையும் பெற்றுக்கொள்ளும்.

## (3) கடனாக்கம் / பணவாக்கம் செய்தல்:

வணிக வங்கிகள் தம்மிடமுள்ள கேள்வி, தவணை வைப்புக்களின் பேரில் கடனாக்கம்/ பணவாக்கம் செய்து வருமானத்தை உழைத்துக் கொள்கின்றன. இதன் மூலம் வங்கிகள் வாடிக்கையாளர்களின் வைப்புத் தொகைக்குச் சமமாக கடன்களினை பணமாகக் கொடுக்காது அவர்களினால் பிறப்பிக்கப்பட்ட பல்வேறு காசோலைகளினை இன்னொரு வாடிக்கையாளரின் கணக்கில் வரவும் செலவும் என்ற அடிப்படையில் பதிவாக வைத்துக்கொள்ளும்.

# பொதுப்பயன் தொழில்பாடுகள்: –

வணிக வங்கிகள் தமது நடவடிக்கையாளர்களின் நன்மை கருதி பொதுவான பயன்களினை அவர்களுக்கும் பெற்றுக் கொடுத்துவருகின்றன. இவை நவின வங்கிகளின் முக்கிய பணியாக இருந்து வருவதுடன் வங்கிகளுக்கிடையிலான திறந்த போட்டியில் அவை ஒன்றை ஒன்று முந்திக்கொள்ள முயன்றுவருகின்றன.

(i) ***பாதுகாப்பு பெட்டகவசதி:-***

வங்கிகள் தமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப அவர்களின் பெறுமதியான அசையும் சொத்துக்கள், முக்கியமான பத்திரங்களினை தமது பாதுகாப்பு பெட்டகங்களில் வைத்து பாதுகாத்துக் கொடுக்கின்றன.

உ+ம்:- தங்கம், வெள்ளி, பெறுமதிமிக்க கற்கள், உறுதிகள், தஸ்தாவேஜ்க்கள்

(ii) ***பிரயாணிகள் காசோலைகள் சேவை:-***

தமது வாடிக்கையாளர்கள் வேறு நாடுகளுக்கு பயனங்களை மேற்கொள்ளும் போது தேவையற்ற பணம் மற்றும் ஆவணங்களினை காவிச் செல்வதிலிருந்தும் மேலும் எதிர் நோக்கும் அபாயங்களிலிருந்தும் தவிர்த்துக் கொள்ளவும். தேவைப்பட்டபோது பணமாக மாற்றிக் கொள்ளக்கூடிய பிரயாணிகள் காசோலையினை வழங்குகின்றன. மேலும் அவர்களுக்கான விமானச்சீட்டுகள் தங்குமிட வசதிகளினையும் தாமே முன்னின்று பெற்றுக் கொடுக்கின்றன.

(iii) ***நாணயக் கடிதங்களினை வழங்கல்:-***

சர்வதேச வர்த்தக முயற்சிகளின்போது பண்டங்கள், சேவைகளினைப் பரிமாற்றிக் கொள்ளும் போது வாடிக்கையாளர்கள் கோரிக்கை விடுத்தால் தமது சொந்த வங்கி நாணயக் கடிதங்களினை வழங்குகின்றன.

(iv) ***புள்ளிவிபரங்கள், தகவல்களினை சேகரித்தல்:-***

வணிக வங்கிகள் தம்மிடமுள்ள வசதிகளினையும் நிறுவனக்கட்டமைப்பைக் கொண்டும், வர்த்தகம், வாணிபம், கைத்தொழில், வங்கி, பணம் போன்றவற்றுடன் தொடர்புபட்ட பல்வேறு தகவல்களையும் சேகரித்து வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகின்றன.

மேலும் சஞ்சிகைகள், அறிக்கைகள், மதிப்பீடுகள், புத்தகங்கள் என்பவற்றையும் பொதுமக்களின் பயன்பாடு கருதி வெளியிட்டு வருகின்றன.

(v) ***உண்டியல்களுக்குப் பாதுகாப்பு உத்தர வாதத்தினை வழங்குதல்*** *(Underwriting Scearities):-*

அரசாங்கம், பொதுதனியார் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட உண்டியல்களின் பேரில் அது தொடர்பான நஷ்டங்களுக்கு பாதுகாப்பு உத்தரவா தங்களினை அளிக்கின்றன.

(vi) ***பரிசுக் காசோலைகளினை வழங்கல்:-***

வருடாந்த, மாதாந்த சீட்டிழுப்புக்களின் மூலம் பரிசுகளினை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றன.

(vii) ***நடுவராகத் தொழில்படல்:-***

வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக் கிடையிலான பிணக்குகள், சச்சரவுகளின் போது இருசாராரையும் சமாதானப்படுத்தி பிரச்சனை களுக்காக பரிகாரத்தையும் தீர்வுகளையும் சிபார்சு செய்கின்றன.

(viii) ***வெளிநாட்டு நாணயமாற்று வியாபாரங்களினை மேற்கொள்ளல்:-***

வணிக வங்கிகள் பல்வேறுபட்ட நாடுகளினது பணங்களினை வைப்பாக ஏற்றுக்கொண்டு தேவைப் படும் வாடிக்கையாளர்களுக்கு அவ்வாறான வெளி நாட்டு நாணயங்களினை இலாபத்திற்கு மாற்றிக் கொடுக்கின்றன. நாணய மாற்றுவீதங்களினை கணித்து அவற்றுக்கு ஏற்ப சிறியளவான இலாபங் களினை அவை உழைத்துக் கொள்கின்றன.

## நவீன தொழில்பாடுகள்: -

இது இரண்டுவகைப்படும். ஒன்று முகவராகத் தொழில்படல், மற்றயது நவின தொழில்நுட்ப விருத்தியான பலாபலன்களினை வாடிக்கையாளர் களுக்குப் பெற்றுக்கொடுத்தல்.

வணிக வங்கிகள் வாடிக்கையாளரின் கோரிக்கை யின் பேரில் அவர்களின் முகவராக பல்வேறுபட்ட பணிகளினை ஆற்றிவருகின்றன அவை பின்வருமாறு:

(i) ***நிதியனுப்பும் தொழிற்பாடு (Remittance of Fands)***

வங்கிகள் தமது வாடிக்கையாளர்களின் பணத்தை ஓர் இடத்திலிருந்து இன்னும் ஓர் இடத்திற்கு காசோலை மூலமாகவோ, உண்டியல் மூலமாகவோ இடமாற்றம் செய்கின்றன.

(ii) ***கடன் பத்திரங்கள், ஏனையசாதனங்களினை சேகரித்தலும் அவற்றுக்கு பணம் செலுத்துதலும்***

காசோலைகள், நாணயமாற்றுச் சான்றிதழ்கள், உத்தரவாதப் பத்திரங்கள் போன்றவற்றை சேகரிப்ப துடன் அவற்றுக்குப் பணமும் செலுத்துகின்றன.

(iii) ***நிலையியல் கட்டலைகளினை நிறைவேற்றுதல் (Execution of Standing Orders)***

வங்கிகள் தமது நடவடிக்கையாளர்களின் பல்வேறுபட்ட பருவகால செலுத்தல்களினை அதாவது அவர்களின் தொலைபேசி, காப்புறுதி, குடிநீர், மின்சாரம் போன்றவற்றைப் பயன்படுத்தி யமைக்கான மாதாந்தக் கட்டணங்களை வாடிக்கை யாளரின் கோரிக்கையின் பேரில் தாமே செலுத்து கின்றன பின்னர் இவ்வாறான செலுத்தல்களினை வாடிக்கையாளரின் கணக்கில் பற்று வைக்கப்படுகின்றன.

(iv) ***பாதுகாப்பு பத்திரங்களினை கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும்.***

வங்கி தமது வாடிக்கையாளர்களுக்காக பல்வேறு நிறுவனங்களினாலும் வெளியிடப்படும் பங்குச் சான்றிதழ்கள், பங்கிருப்புகள், பத்திரங் கள், கடன்பத்திரங்கள் (Depentures) என்பன வற்றை கொள்வனவு செய்வதுடன் விற்பனையும் செய்து வருகின்றன.

(v) ***பங்குலாபத்தினை சேகரித்தலும், பிறசேவைகளும்***

வங்கிகள் தமது வாடிக்கையாளர்களின் கடன் பத்திரங்கள், பங்குகள் மீதான வட்டிகளினையும் பங்குலாபங்களினையும் சேகரித்து வாடிக்கை யாளர்களின் கணக்கில் வரவு வைக்கின்றன. அத்துடன் வாடிக்கையாளர்களின் வருமான வரி களினைக் கணித்து அதனையும் அரசாங்கத் திற்குச் செலுத்துகின்றன. மேலும் வாடிக்கையாளர்களின் கடன் பொறுப்புக்கள் மீதான மாதாந்த செலுத்தல் களினை அவர்கள் இறந்தாலோ அல்லது முறிவடைந் தாலோ தானே நம்பிக்கையாளராக இருந்து தொடர்ந் தும் செலுத்திவருகின்றன.

இன்னும் வாடிக்கையாளர் கோருமிடத்து அவர்களுக்காக வாகனங்கள், புத்தகங்கள், வீடுகள், விமானச்சீட்டுகள் போன்றவற்றையும் கொள்வனவு செய்து வழங்குகின்றன. இப்பணிகளுக்கான சேவைக் கட்டணங்களினை அவை பெறுகின்றன.

ளினை
துதலும்
|தழ்கள்,
ஊசகரிப்ப
|ன்றன.

வற்றுதல்

ளர்களின்
)களினை
ாப்புறுதி,
ன்படுத்தி
வாடிக்கை
செலுத்து
ல்களினை
படுகின்றன.

ளவனவு
ம்.

களுக்காக
ரியிடப்படும்
ள், பத்திரங்
:es) என்பன
விற்பனையும்

சேவைகளும்

களின் கடன்
களினையும்
வாடிக்கை
வைக்கின்றன.
ருமான வரி
ங்கத் திற்குச்
யாளர்களின்
த செலுத்தல்
து முறிவடைந்
ந்து தொடர்ந்

கோருமிடத்து
ங்கள், வீடுகள்,
ம் கொள்வனவு
க்கான சேவைக்
ன்றன.





## தொழில்நுட்ப பணிகள்;-

நவீன தொழில்நுட்ப புத்தாக்கங்களின் மூலமான பலாபலன்களினை இன்றைய நவீன வணிக வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகின்றன. *அவையாவன:*

* தொலைநகல் வங்கிச்சேவை (Tele Bank Service).
* சர்வதேச வலைப்பின்னல் வங்கிச்சேவை (Internet Bank Service).
* மின்னஞ்சல் சேமிப்பு / இலத்திரானிக் சேமிப்பு (Electronic Serivng).
* கடன் அட்டை சேவை (Credit Card Service).
* மின்னஞ்சல் பரிமாற்றம் (E-mail Transfer).

உ+ம்:

(1) மின்னஞ்சல் பணப்பரிமாற்றங்கள் (Electronic Money Transfers / E-Money / E-Cash

(2) Telegraphic Transfers.

* டிஜிட்டல் இணைப்பு வலையமைப்புச் சேவை /Anywere Banking Service / One line Service

உ+ம்: Hatnanet

* ATM சேவை.

மேற்கூறப்பட்டுள்ள சேவைகளினை அதிநவீன வங்கிச் சேவைகள் எனக் குறித்துக்காட்ட முடியும்.

## தொகுப்புரை

வரலாற்றில் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டிருக்கும் வங்கியமைப்பு; பொருளாதாரம், நிதி, தொழில்நுட்பம் போன்றவற்றின் செய்முறை குறித்து பல்வேறு காலகட்டங்களிலும் பரிணாம வளர்ச்சியைப் பெற்றுவந்துள்ளமையை நாம் அவற்றின் தொழில்பாடுகளின் பல்வேறுபட்ட விரிவாக்கங்களினைக் கொண்டு உணர முடிகின்றது. இன்னும் கூறப்போனால் வங்கிகளின் வரலாற்றின் ஆரம்பம் முதல் இன்றுவரை அவற்றின் பணிகள் குறித்து அவை, மரபுரீதியிலான தன்மையிலிருந்து மிகவும் வேறுபட்ட இயல்பைக் காட்டுகின்றன எனலாம்.

இத்தகைய மாற்றங்களினூடான அனுபவங்கள் புதிய தலைமுறையினர்க்கு மிகவும் சரியாகக் கிடைத்துள்ளனவா என்றால் அது கேள்விக்குரியது. இவ்வாறு கூறுமிடத்து நவீன அபிவிருத்திகளின் தெளிவு குறித்து அவை இன்னும் சாதாரண மக்களினைச் சென்றடையவில்லை என்றே கூறமுடிகின்றது. அவ்வாறாயின்; வணிக வங்கிகளில் செல்வந்தர்களின் பங்குபற்றலானது வறியவர்களினை விட மிகவும் அதிகளவில் இருந்துவருகின்றது. மேலும் கிராமப்புறங்களினை நோக்கிய வங்கி அமைப்பின் நகர்வு மிகவும் அரிதாகவே இடம் பெறுகின்றது. இன்னும் சொல்லப்போனால்; இலங்கையில் - இன்று காணப்படும் வணிகவங்கிகளின் வாடிக்கையாளர்களுக்கான அனுகூலங்களினை ஒப்பீட்டு ரீதியில் வறிய வாடிக்கையாளர்களினை விட செல்வந்த, கல்வியறிவுள்ள வாடிக்கையாளர்கள்தான் அதிகளவில் பெற்று வருகின்றனர். உதாரணமான வணிக வங்கிகளின் சுயபோட்டியின் ஒரு கட்டத்தில் அவை; சேமிப்பு ஊக்குவிப்புக்காக வழங்கிவரும் பரிசுக் குலுக்கல்களின் பங்காளர்களாக நகர்ப்புற செல்வந்தர்களே அதிகளவில் இருந்துவருகின்றனர். இது அவர்கள் புறத்தே நியாயமானதாக இருப்பினும் கூட கிராமிய பொருளாதாரத்தின் அடிமட்ட வாடிக்கையாளர்களின் சேமிப்புக்கான வெகுமானங்கள் போதியதாக இருந்து வரவில்லை என்பதும் தவிர்க்கமுடியாத நியாயமாகும்.

## உசாத்துணை:-


* Shekhar and Shekhar (1998)
  **Banking Theory and Practice,**
  Vikas Publishing House (Pvt) Ltd, New Delhi.
* Setti, T.T, (1996)
  **Money Banking and International Trade,**
  S.Chand and Company Ltd, New Delhi.
* Subba Rao, P, M.M. Rao, V.S.P. Rao (1992)
  **Currency and Banking**
  Tata MeGraw-Hill Publishing Company Ltd, New Delhi.
* Suraj B. Gupta (2002)
  Monetary Economics,
  **S. Chand and Company Ltd, New Delhi.**
* Paul R.R, S.L. Bhardwaj, Harpal Walia (1992)
  **Money Banking and International Trade,**
  Kalyani publishers.

# பொருளாதார வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

**S. Santhirasegaram** (Lecturer)
*Department of Economis, University of Jaffna.*

## அறிமுகம்

பொருளியல் அபிவிருத்தி என்ற எண்ணக் கரு பல்வேறுபட்ட நோக்குகளில் முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக காணப்படுகிறது. ஒரு நாடு பொருளாதார காரணிகளில் மட்டுமன்றி ஏனைய சமூக, அரசியல் காரணிகளிலும் முன்னேற்றங்களையும் மாற்றங் களையும் ஏற்படுத்துகின்ற ஓர் செயல்முறை யினையே நாம் அபிவிருத்தி என அழைக்கின்றோம். அபிவிருத் திக்கு மிக முக்கியமான தாகவும் அடிப்படையாகவும் அமைவது பொருளாதார வளர்ச்சி ஆகும். பொருளா தாரவளர்ச்சி அபிவிருத்தி அல்லது அபிவிருத்திக்கான ஓர் அடித்தளமான ஓர் காரணி ஆகும். பொருளாதார வளர்ச்சி நாட்டு மக்கள் அனைவருக்கும் ஏறத்தாழ சமமாகப்பங்கிடப்பட்டு அணைத்து மக்களது வாழ்க்கைத்தரம் அதிகரிக்கின்றபோது அதனை நாம் அபிவிருத்தி எனக்கூறலாம். எனவே அபிவிருத் திக்கு அடிப்படையாக இருக்கின்ற பொருளாதார வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றகாரணி களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இக்காரணிகள் வரலாற்று அனுகுமுறையில் நோக்கப்படலாம். அதாவது பொருளாதார சிந்தனைப் பள்ளியினர் ஒவ்வொரு காலப்பகுதியிலும் பொருளா தாரவளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் காரணி களை முதன்மைப்படுத்தினர். இந்த நோக்கு பேரினப் பொருளாதார நோக்கில் அமைந்துள்ளது.

பொருளாதர வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை சிற்றினப் பொருளாதார அடிப்படையிலும் நோக்கலாம். சிற்றினப் பொருளாதாரக் காரணிகள் மறைமுகமாக பேரினப் பொருளாதார காரணிகளில் தொடர்புபட்டிருந்த போது நாம் ஓர் ஆய்வு அணுகுமுறையில் சிற்றினப் பொருளாதாரக் காரணிகளாக சிலவற்றைக் குறிப்பிடலாம்.

இக்கட்டுரையானது பொருளாதார வளர்ச்சி யின் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை பேரின, சிற்றினப் பொருளாதாரக் கோட்பாட்டு அடிப்படையில் சுருக்கமாக ஆய்வு செய்ய முற்படுகிறது.

## பொருளாதார வளர்ச்சி

ஓருநாட்டின் மெய்த்தேசிய வருமானம் அல்லது உற்பத்தியானது தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லுதல் பொருளாதார வளர்ச்சி என அழைக்கப் படுகிறது.

$$\text{பொருளாதார வளர்ச்சி} = \frac{\text{இரண்டு ஆண்டுகளுக்கு இடையிலான மொத்த தேசிய வருமான வேறுபாடு}}{\text{குறித்த ஆண்டுக்கு முன்னைய ஆண்டு மெய் மொத்தத்தேசிய வருமானம்}} \times 100$$

$$= \frac{\Delta Y}{Y} \times 100$$

இங்கு $Y$ என்பது மெய்த்தேசிய வருமானத் தையும், $\Delta Y$ என்பது இரண்டு ஆண்டுகளுக்கு இடையில் மொத்த தேசிய வருமானத்தில் தரப்பட்ட மாற்றத்தையும் குறிப்பிடுகிறது.

பொருளாதார வளர்ச்சியை அண்மை ஆண்டு களில் நிலையான விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படுகின்ற அதிகரிப்பாகவும் கொள்ளப்படுகிறது.

ஒரு நாட்டின் வருமானம் அதிகரிப்பதற்கான வழிகள் எவை? கொள்கைகள் எவை? அவையே பொருளாதார வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் ஆகும். அவற்றை நோக்குவோம்.